# அகிலனின் தாய்ப்பசு – ஒரு பார்வை
# Agilanin Thaippasu- An Overview

**முனைவர் உமா அழகிரி**
**Dr Uma Allaghery**

"TAM 2001 Y (3) 5.4 Agilanin Thaippasu- An Overview(PPT) " by Dr Uma Allaghery(2024), Mahatma Gandhi Institute is licensed under CC BY 4.0

# தாய்ப்பசு

- தாய்மை என்னும் கருத்து புலப்படுத்துகிறது.
- தாயின் தியாகத்தைக் காட்டுகிறது.
- தாய்ப்பசு தாயின் பாசத்தையும் உணர்வையும் வெளிப்படுத்துகிறது.
- மாடசாமி என்ற பால்காரன் – பணத்தில் பேராசை காட்டுபவன்.
- விலங்குகளைக் காப்பாற்ற வேண்டும். அவற்றைத் துன்புறுத்தக் கூடாது என்ற கருத்து புலப்படுத்துகிறார் அகிலன்.
- தாய்ப்பசு குமரனைக் காப்பாற்ற தனது உயிரையே பலி கொடுத்தது.

# அகிலன் கையாண்டுள்ள உத்திகள்

- பசு என்பது மையப் பாத்திரமாக அமைந்துள்ளது.
- பசு தனது கண்களால் காளையிடம் பேசிய பேச்சு: “பார்த்தாயா உன் மகனை?, உன்னைப் போலவே பிறந்திருக்கிறான்!”
- ‘மனிதர்களையும் சரி, மிருகங்களையும் சரி, வயிற்றில் அடித்துப் பட்டினி போட்டு, அணுஅணுவாகக் கொன்றால், அதைத் தடுப்பதற்கு எந்தச் சட்டமுமில்லை,” என்ற தொடரால் அகிலன் நம்மைச் சிந்திக்கச் செய்கிறார்.
- காளை அலறிய அலறலில், “கொலைக்குக் கொலை, பழிக்குப் பழி” எனக் குமுறியது; மனிதன் செய்துள்ள பழிக்கு, பழி வாங்க வேண்டும் என்று அகிலன் ஒரு புறம் பகர்கிறார்; மறு புறம் மனிதனைப் போல் கேவலமாய் நடக்கக் கூடாது என்கிறார்.

# மாடசாமியின் எண்ணம்

- தொடக்கத்தில் மாடசாமி கன்றைப் பிடித்துக் கட்டவில்லை.
- சீம்பாலைக் குடிக்கக் கன்றை விட்டுவிட்டான்.
- சீம்பால் தனக்குத் தேவையில்லை, அவரால் அதை விற்க முடியாது.
- சில நாட்களுக்குப் பிறகு கன்றுக்குட்டியைக் கட்டி வைத்தான்; கன்றுக்குட்டியால் நினைத்தபடிப் பாலைக் குடிக்க முடியவில்லை.
- பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்தான்; பால் சுரந்த சரியான நேரத்தில் கன்றுக்குட்டியை மறுபடியும் கட்டிவிட்டு அவன் பாலைக் கறக்கத் தொடங்கினான். இது ஓர் அநியாயச் செயல்.
- கன்றுக்குட்டிக்கு உரிய பால் மாடசாமி கறந்து விற்றான்; கன்றுக்குட்டிக்கு ஒரு சொட்டுப் பாலும் கிடைக்கவில்லை; மாடசாமியின் செயல் மிகவும் கொடுமையானது.

# பசு மற்றும் காளையின் தவிப்பு

- கன்றுக்குட்டி பசியால் துடிதுடித்தது. அது கதறியது. ஆனால் பசுவாலும் காளையாலும் எதுவும் செய்ய முடியவில்லை.
- தளதளவென்று சதைப் பிடிப்போடு இருக்க வேண்டிய கன்றுக்குட்டியின் உடம்பில் எலும்புக் கூடு காண முடிகிறது.
- கன்றுக்குட்டி தனது தாயை ஏக்கத்தோடு பார்த்தது; ஆனால் தாய்ப்பசுவால் எதுவும் செய்ய முடியவில்லை. கன்றுக்குட்டி தனது வேதனையை வெளிப்படுத்தியது; தாயின் அரவணைப்பைத் தேடியது; ஆனால், பாவி மாடசாமி பணத்துக்காகச் செய்துள்ள செயல் மன்னிக்க முடியாத ஒன்று.
- கன்றுக்குட்டி இறந்துவிட்டது. மாடசாமி வைக்கோலால் அடைத்த கன்றுக்குட்டியைத் தாய்ப்பசு முன் கொண்டுவந்து நிறுத்தியபோது பசுவின் மடியில் பால் சுரந்தது; கண்களில் கண்ணீர் வழிந்தது; அதன் கதறல் கேட்ட காளைமாடும் எதிரொலி கொடுத்தது.

# பசு மற்றும் காளையின் தவிப்பு

- ஒரு காலத்தில் காளை கிராமத்தில் வாழ்ந்தது. அது மஞ்சுவிரட்டில் கலந்துகொண்டு வெற்றி பெற்றது; ஆனால், இப்போது பட்டணத்தில் பார வண்டி இழுத்தியது.
- தாய்ப்பசு பொங்கலை முகர்ந்து கண்ணீர் வடித்தது. தனது கொம்பால் பொங்கல் பாத்திரத்தை மோதிக் கீழே உருட்டிவிட்டது. தாய்ப்பசு தனது கன்றுக்குட்டியை நினைத்து வருத்தம் அடைந்தது. சலிப்பு ஏற்பட்டது. இதைப் பார்த்த காளை சீற்றத்துடன் பாய்ந்துவந்து குமரனைக் கொல்ல நினைத்தது; ஆனால், தாய்ப்பசு காளைக்கும் குமரனுக்கும் குறுக்கே வந்ததால் காளையின் கொம்புகள் தாய்ப்பசுவின் கழுத்தில் பாய்ந்தன.

# கன்றுக்குட்டியும் மாடசாமி மகனும்

- கன்றுக்குட்டிக்கு ஒரு நண்பன் இருந்தான்.
- அவன் மாடசாமியுடைய மகன்.
- அவன் பெயர் குமரன்.
- குமரனுடைய தாய் அவனை வளர்த்துக்கொள்ள பால் இல்லை.
- குமரனும் தாய்ப்பசுவின் பாலைக் குடித்தான்.
- தாய்ப்பசு கன்றுக்குட்டியையும் குமரனையும் தனது இரு குழந்தைகளைப் போல் நினைத்தது.
- அது கன்றுக்குட்டியையும் குமரனையும் தனது நாக்கால் அன்போடு மாறி மாறித் தடவிக் கொடுத்தது.
- தாய்ப்பசு குமரனைக் காப்பாற்றியது.

# கன்றுக்குட்டியும் மாடசாமி மகனும்

- பசுவின் பால்தான் குமரனுடைய உடம்பில் ஓடும் இரத்தமாக இருந்தது.
- பசு காளையைப் பார்த்து, “நீ மனிதனைப் போல் கேவலமாய் நடந்துகொள்கிறாய். குமரனும் என் பால் குடித்து வளர்ந்தவன். உனக்கு ஏன் இவ்வளவு வெறி வந்தது?,” எனக் கோபத்தோடு கதறியது.
- மாடசாமி போன்றவனுக்குப் புத்தி இல்லை; மிருகமாகிய நாம் அதேபோல் நடத்தக்கூடாது எனத் தாய்ப்பசு காளைக்கு அறிவுறுத்தியது போலும்.

# தாய்ப்பசு கதையிலுள்ள கருத்துக்கள்

- மற்றவர்களை மன்னித்துக்கொள்ள வேண்டும்.
- சகிப்புத் தன்மை இருக்க வேண்டும்.
- மற்றவர்கள் தப்பு செய்தால் நாமும் அவ்வாறே செய்யக்கூடாது.
- மனிதன் சுயநலவாதி.
- விலங்குகளை நன்முறையில் வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- அறிவாளியாக இருக்க வேண்டும்.
- சூழ்ச்சி செய்யக் கூடாது.
- பசி என்னும் நோயைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
- சொந்த இலட்சியத்துக்கு விலங்குகளைப் பயன்படுத்தக்கூடாது.